//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.78/2023**

**prosecution witness: PW-6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A1, A2 present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலு | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**<u>25.09.2024</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் தற்சமயம் மண்டபம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.06.2022-ம் தேதி 17.00 மணிக்கு நான் மண்டபம் காவல்நிலையத்தில் நிலையப் பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிசிக்சையில் இருந்த ஈஸ்வரன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று 20.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.120/2022 பிரிவுகள்.294(b), 323, 324, 506(2) இதச கீழ் வழக்கு பதிவு செய்தேன்.

3. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

4. புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை ஆய்வாளரின் விசாரணைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1.மதுபாட்டில்கள் விற்பது சம்பந்தமாக புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. எதிரி சக்தி புகார்தாரர் மதுபாட்டில்கள் விற்பது சம்பந்தமாக எங்களது மேல்அதிகாரிக்கு புகார் அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி சக்தி ஒரு வலது கை இல்லாதவர் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரிகளை பற்றி எந்த விசாரணையும் செய்யவில்லை எந்த விபரமும் தெரியாது என்றால் புகார்தாரரிடம் விசாரித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் எதிரியை நான் கைது செய்யவில்லை.

2.நான் உண்மையில் எதிரிகள் பற்றி விசாரித்து இருந்ததால் 1வது எதிரி சக்திக்கு வலது கை இல்லை என்ற விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. வலது கை இல்லாதவர் ஒரு நபரை ஓங்கி அடிப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் வாய்ப்புண்டு. இடது கையால் தான் அடித்தார் என்று வழக்கிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. புகார்தாரர் நான் போகும் போது மயக்கநிலையில் இருந்தார் என்றால் இல்லை. புகார்தாரர் மயக்கநிலையில் இருந்தார் என்றால் தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமான விசயங்களை புகார்தாரரின் சகோதரர் முருகன் சொன்னார் என்றால் இல்லை உறவினர்கள் இருந்தார்கள் அவர்கள் சொன்னார்கள். 2வது எதிரி சரவணன் கையால் அடித்ததாகத்தான் வழக்கு என்றால் இருவரும் கல், கம்பால் அடித்ததாகத்தான் வழக்கு.

4. நான்சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் நேரடியாக மருத்துவமனை சென்று புகார்தாரரிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து வாக்குமூலத்தை உற்பத்தி செய்து கொண்டு எந்த விசாரணையும் செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், குற்றத்திற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.09.25 17:23:50 +0530